## வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் (பொ) செயல்முறைகள்
ந.க.எண்.4089/ஆ5/2024, நாள்.13/08/2025

•••••

பொருள் பள்ளிக் கல்வி – மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வெளியிட்ட அறிவிப்பு – திருக்குறளில் ஆர்வமும், புலமையும் மிக்க ஆசிரியர்கள், பயிற்றுநர்கள் தேர்வு செய்யப்பட்டு அவர்களுக்குப் பயிற்சி வழங்கி மாவட்டந்தோறும் தொடர் பயிலரங்குகள், பயிற்சி வகுப்புகள் வழங்கும் "திருக்குறள் திருப்பணிகள்" திட்டத்தினைச் செயல்படுத்துதல் – தொடர்பாக

பார்வை

1. 28.04.2025ஆம் நாளிட்ட தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் (தவ1–2)த் துறை அரசாணை (நிலை) எண். 72
2. 31.07.2025ஆம் நாளிட்ட மாவட்ட ஆட்சியரின் அனுமதி ஆணை எண். 196/2025
3. வேலூர் மாவட்டம், தமிழ் வளர்ச்சித் துணை இயக்குநரின் கடித ந.க.எண்.196/2025, நாள். 11.08.2025

•••••

பார்வை 3ல் காணும் வேலூர் மாவட்டம், தமிழ் வளர்ச்சித் துணை இயக்குநரின் கடிதத்தில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வெளியிட்ட அறிவிப்பின்படி ஒவ்வொரு மாவட்டத்திற்கும் திருக்குறளில் ஆர்வமும், புலமையும் மிக்க ஆசிரியர்கள், பயிற்றுநர்கள் தேர்வு செய்யப்பட்டு அவர்களுக்குப் பயிற்சி வழங்கி மாவட்டந்தோறும் தொடர் பயிலரங்குகள், பயிற்சி வகுப்புகள் வழங்கும் "திருக்குறள் திருப்பணிகள்" திட்டத்தினை வேலூர் மாவட்டத்தில் கீழ்காணும் பள்ளிகளில் திருக்குறள் பயிற்சி வகுப்புகள் 30 வாரங்கள் (வாரத்திற்கு அரை நாள் வீதம்) 16.08.2025 முதல் வாரந்தோறும் சனிக்கிழமைகளில் நடைபெறவுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

| குழு | பயிற்றுநர் பெயர் | வட்டத்தின் பெயர் | பயிற்சி நடைபெறும் பள்ளியின் பெயர் |
|---|---|---|---|
| 1 | முனைவர் பா. சம்பத்குமார், தொடர்பு எண். 9486425751 | பேர்ணம்பட்டு, குடியாத்தம் | சாதனை கல்வி மையம், தங்கம் நகர் குடியேற்றம் |
| 2 | புலவர் சு. மோகன்குமார், தொடர்பு எண். 9487043692 | அணைக்கட்டு, கே.வி. குப்பம் | அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி, பள்ளிகொண்டா |
| 3 | திரு கு. வெங்கடேசன், தொடர்பு எண். – 9345305948 | வேலூர், காட்பாடி | ஸ்ரீ வெங்கடேஸ்வரா மேல்நிலைப் பள்ளி, வேலூர். |

எனவே, திருக்குறள் பயிற்சி வகுப்புகள் பள்ளிகொண்டா, அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி மற்றும் வேலூர், ஸ்ரீ வெங்கடேஸ்வரா மேல்நிலைப் பள்ளியில் 16.08.2025 முதல் வாரந்தோறும் சனிக்கிழமைகளில் நடைபெறுவதற்கு அனுமதியும் மற்றும் அனைத்து வகை பள்ளி மாணவர்கள் பெற்றோர் துணையுடன் பாதுகாப்பாக திருக்குறள் பயிற்சி வகுப்புகளில் பங்கேற்று பயன்பெறச் செய்யுமாறு அனைத்து வகை பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

முதன்மைக் கல்வி அலுவலர் (பொ),
வேலூர்.

பெறுநர் –

1. தலைமையாசிரியர்,
   அனைத்து வகை பள்ளிகள்,
   வேலூர் மாவட்டம்.
2. தலைமையாசிரியர்,
   அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி, பள்ளிகொண்டா
3. தலைமையாசிரியர்,
   ஸ்ரீ வெங்கடேஸ்வரா மேல்நிலைப் பள்ளி, வேலூர்.

நகல்–

1. தமிழ் வளர்ச்சித் துணை இயக்குநர்,
   வேலூர் மாவட்டம்,
2. மாவட்ட கல்வி அலுவலர்கள்,
   (இடைநிலை / தொடக்கக் கல்வி / தனியார் பள்ளிகள்)
   வேலூர் மாவட்டம்
   (தொடர் நடவடிக்கையின் பொருட்டு)
   (இவ்வலுவலக மின்னஞ்சல் மூலமாக)